ஒற்றை நாற்று நடவு முறை - நேபாளத்திலும் வெற்றிக்கொடி !



கைகளால் களை எடுப்பதால் செலவு இரட்டிப்பாகிறது. ரோட்டரி களை நீக்கிக் கருவிக் கொண்டு, களை நீக்கும் போது வழக்கத்தை விட செலவு குறைகிறது. மூன்று முறை களை நீக்கியை உருட்டிக் களை எடுக்கும் போது ஏக்கருக்கு 800 கிலோ விளைச்சல் கூடுதலாகக் கிடைக்கிறது. முதல் மாதத்தில் வயலில் களை இல்லாது இருந்தால் விரைவாக சிம்பு (கிளை) வெடிக்கிறது. கதிர் பெரிதாக இருக்கிறது.மண்ணில் காற்றோட்டம் இருப்பது விளைச்சலைக் கூட்டுகிறது.

அதிகம் தொழு எரு இடப்பட்ட நிலத்தில் நிலம் வெடிக்கும் வரை நீரை வடிப்பது நல்ல விளைச்சலைத் தருகிறது. ஒற்றை நாற்று முறையில் நாட்டு இரக நெல்லைப் பயிரிடும் போது விளைச்சல் கூடுவது பளிச்சென்று தெரிகிறது. ஒற்றை நாற்று நடவு முறை நேபாளத்தில் உணவுப்பற்றாக்குறையை முடிவுக்குக் கொண்டு வரும். இதன் மூலம் அரிசி இறக்குமதிக்காக செலவிடப்படும்.

அந்நியச் செலாவணி அதிக அளவில் மிச்சமாகும்.விதை, இராசயன உரம், பூச்சிக்கொல்லி, தண்ணீர்த் தேவை குறைவதால் உழவர்கள் ஆர்வம் மிகுதியாகிறது. சுற்றுச்சூழல் மாசுபடுவது தவிர்க்கப்படுகிறது என்கிறார்.

**தொடர்புக்கு**

ராஜேந்திர உப்ரெட்டி,
வேளாண் விரிவாக்க அலுவலர்,
மாவட்ட வேளாண் வளர்ச்சி அலுவலகம்,
மொராங்க்
நேபால்
மின்னஞ்சல் : dadomorang@wink.com.np

---